## மெட்ரோ ரயில் பணிகள் முடிந்ததால்

# நந்தனம் முதல் அண்ணாசாலை வரை பழைய முறைப்படி போக்குவரத்து

சென்னை, ஜூலை 30-

மெட்ரோ ரயில் பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து நந்தனம் முதல் அண்ணா சாலை வரை மீண்டும் பழைய முறைப்படி போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து கூடுதல் கமிஷனர் அருண் தெரிவித்துள்ளார்.

இது குறித்து போக்குவரத்து கூடுதல் கமிஷனர் அருண் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிகளை முன்னிட்டு அண்ணா சாலையில் போக்குவரத்து மாற்றப்பட்டது. சைதாப்பேட்டையில் இருந்து தேனாம்பேட்டை நோக்கி செல்லும் மாநகரப் பேருந்துகள் மட்டும் நந்தனம் சந்திப்பில் நேரே செல்லவும் இதர வாகனங்கள் இடது பக்கம் திரும்பி செவாலியர் சிவாஜி சாலை வழியாக ஜெமினி பாலம் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது.

சென்னை மெட்ரோ ரயில் பணிகள் முடிவடைந்ததை அடுத்து, போக்குவரத்தில் பழைய செயல்பாடு நடைமுறைக்கு வருகிறது. அதற்காக 26ம் தேதி சோதனை ஓட்டம் நடைபெற்றது. அதையடுத்து, கீழ் கண்டவாறு போக்குவரத்து இனி செயல்படும்.

அண்ணா சாலையில் சைதாப்பேட்டையில் இருந்து தேனாம்பேட்டை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் நந்தனம் சந்திப்பில் நேரே செல்லவும் இடது புறம் திரும்பி வெங்கட் நாராயணா சாலை செல்லவும், வலது புறம் திரும்பி சேமியர் சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

அண்ணா சாலையில் தேனாம்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரும் அனைத்து வாகனங்களும் வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

சேமியர்ஸ் சாலையில் இருந்து வரும் வாகனங்கள் நந்தனம் சந்திப்பில் இடது புறம் திரும்பி சைதாப்பேட்டை நோக்கி செல்லவும், வலது புறம் திரும்பி அண்ணா சாலைக்கு செல்லவும், மற்றும் நேரே வெங்கட் நாராயணா சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

வெங்கட் நாராயணா சாலையில் இருந்து வரும் வாகனங்கள் நந்தனம் சந்திப்பில் இருந்து இடது புறம் திரும்பி அண்ணா சாலைக்கும், வலது புறம் திரும்பி சைதாப்பேட்டை நோக்கி செல்லவும் மற்றும் நேராக சேமியர்ஸ் சாலை செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.